1982 மார்ச் 2]

எடை மற்றும் அளவுகள் சோதனை.

*வினா எண் 211—திரு த. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வியாபாரிகளின் எடை மற்றும் அளவுகள் உரிய அதிகாரிகளால் முன்னறிவிப்பு இன்றி திடீரென்று சரிபார்க்க "பறக்கும் படை" ஒன்று அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

[முற்பகல் 9–50]

திரு. த. ஆறுமுகம்: கேள்வி கேட்டு நெடுநாளாகியும் விடை "இல்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பலயிடங்களில் வியாபாரிகளின் எடை மற்றும் அளவுகள் குறைவாக இருப்பதால் அது குறித்து திடீரென்று பரிசோதனை செய்ய ஒரு பறக்கும் படை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தற்போது தொழிலாளர் நல ஆய்வாளர், துணை ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோர் இதுகுறித்து அவ்வப்போது சோதனைகளை நடத்தி நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். தற்போது அரசிடம் ஒரு பறக்கும் படை அமைக்கக்கூடிய அளவிற்கு செயற்குறிப்பு இல்லை என்று சுட்டிக்காட்டினேன். சோதனைகள் நடத்தி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தேவைப்பட்டால் பறக்கும் படை அமைக்கலாம். ஆனால், இதில் முக்கியமானது அதுவல்ல. தற்போது வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ் சட்டத்தில் இதுபோன்ற தவறு இழைக்கின்றவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை மிகக் குறைவாக இருப்பதால் சட்டத்திருத்தம் கொண்டுவந்து கடுமையான தண்டனை கொடுக்க வழிவகை செய்கிறபோது இந்தக் குறைபாடுகளைக் களைய முடியும் என்று அரசு நம்புகிறது.

TRUTH ALONE TRIUMPHS

கூட்டுறவு வளர்ச்சி நிதி.

*வினா எண் 212—திரு சோ அழகர்சாமி: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா::

(அ) கூட்டுறவு வளர்ச்சி நிதியில் 1980 ஜூன் 30 முடிய மொத்தம் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) இந்த நிதியிலிருந்து நலிந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் விவரம் யாது ?

[1981 மார்ச் 2

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: (அ) ரூபாய் 2,51,69,431.3

(ஆ) ஆம்.

(இ) பதினான்கு நலிந்த கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபாய் 86,89,600.00 கடன் வழங்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: இந்த கூட்டுறவு வளர்ச்சி நிதி என்பது எந்த விகிதத்தில் வசூல் செய்யப்படுகிறது? அதைக் குறைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை கூட்டுறவு நிறுவனங் களால் அரசுக்கு விடப்பட்டிருக்கிறது. அதுபற்றி ஆலோசிக்கப் பட்டிருக்கிறதா? இரண்டு கோடி ரூபாய் வரை இந்த நிதியில் சேர்த்திருப்பதாகச் சொன்னார்கள். பல கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு நியாயமான ஊதியம் கொடுக்க முடியாமல் அப்படிப்பட்ட கூட்டுறவுப் பண்டகசாலைகள் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும்போது இந்த வளர்ச்சி நிதியிலிருந்து ஈடு செய்யும் முறையில் மானியமாகவாவது கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கூட்டுறவுச் சட்ட விதி 46 (1)-ன் அடிப்படையில் 3 சதவீதம் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் இந்த கூட்டுறவு டெவலப்மென்ட் பண்ட் என்பதற்காக ஒதுக்குகிறார்கள். அப்படி 3 சதவீதம் என்று ஒதுக்கப்பட்டு வருவதை இன்னும் குறைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை தற்போது பொதுக் குழுவிடம் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இது ஆய்ந்து வரப்படுகிறது. அந்த அடிப்படையில் நட வடிக்கை எடுக்கலாம். பணியாளர்களுக்குச் சில இடங்களில் சங்கங்கள் ஊதியம் தர முடியாத நிலை இருப்பதற்குக் காரணம் ஏற்கனவே நான் சொல்லியிருப்பது போல் வாங்கிய கடன்களைக் குறிப்பாகப் பெறும் விவசாயிகள் திருப்பித் தராமல் இருக்கும் காரணத்தால் நிதி ஆதாரம் இல்லாமல் அந்தச் சங்கங்கள் எல்லாம் சற்று நலிந்திருக்கின்றன. இதிலிருந்து பணத்தை அதற்கு டைவர்ட் செய்ய வழிவகை இல்லை. ஆனால் பணியாளர்களுக்கு ஊதியம் தரக்கூடிய அளவிற்கு என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பதுபற்றி அரசு தீவிரமாக ஆய்ந்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: கூட்டுறவு வளர்ச்சி நிதி என்ப தோடு, கூட்டுறவு கல்வி நிதி என்ற பெயரில் 2 சதவீதம் வசூலிக் கப்படுகிறது. அதிகமான தொகை இந்த நிதியில் சேர்ந்து வரு வதால் கூட்டுறவு பண்டகசாலை போன்ற நிறுவனங்களில், வேலை செய்துவரும் பணியாளர்களுக்கு, நியாயமான ஊதியம் கொடுக்க முடியாத ஒரு நிலை இருப்பதால் அவர்களுக்கு இந்தத் தொகையிலிருந்து ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு வட்டி யில்லாமல் கொடுத்து உதவும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா?

1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 46 (1)-ன் கீழ் கூட்டுறவு டெவலப்மென்ட் பண்ட் என்று வளர்ச்சி நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பணியாளர்களுக்கு ஊதியமாக அதிலிருந்து கொடுக்க வழிவகை இல்லை. பணியாளர்களுக்கு ஊதியம் அல்லது அட்வான்ஸ் கொடுப்பதற்கு வேறு என்ன செய்யலாம் என்பதுபற்றி அரசு ஆராயும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: கூட்டுறவு நிறுவனங்களுக்கு, நலிந்த நிறுவனங்கள் என்று மட்டுமல்லாமல், எந்த வகையில் கடன் வசதி செய்யப்படுகிறது? ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய்க்கு அதிகமாக உள்ள இந்த வளர்ச்சி நிதியிலிருந்து 86 இலட்சம் ரூபாய்தான் செலவு செய்யப்படுகிறது என்று கூறப் படுகிறது. அதை வேறு வகையில் செலவு செய்ய அரசு ஆவன செய்யுமா? அதோடுகூட நலிந்த சங்கங்களுக்குக் கொடுக்கப் படுகிற இந்த 10 சதவீத வட்டியைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நலிந்த பிரிவினர் என்ற அடிப்படையில் எங்கெங்கு கொடுக்கப்படுகின்றன என்று கேட்டிருக்கிறார்கள். இது நுகர் பொருள் அங்காடிகளாக இருந்தாலும், அல்லது உற்பத்தியாளர்கள் கூட்டுறவு அமைப்புகளாக இருந்தாலும் அல்லது க்ரெடிட் சொஸைட்டிகளாக இருந்தாலும் அனைத்துக்கும் அளிக்கப்படுகிறது. 16 அமைப்புகளுக்கு மேலே சொன்ன தொகை வழங்கப் படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 சதவீத வட்டி குறைப்பு என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைப்பற்றி கூறுகிறார்கள் என்பது எனக்கு விளங்க வில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு 10 சதவீத வட்டி விகிதத்தில் வளர்ச்சி நிதியிலே இருந்து கொடுக்கப்படுகிறது. அதைக் குறைப் பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இது குறித்து ஆய்வுகள் நடத்தப் பட்டு வருகின்றன. ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அந்தக் குழுவிலே உறுப்பினராக இருக்கிறார். அடுத்த வாரம் நடக்க இருக்கும் ஆய்வுக் குழுவிலே இது குறித்து பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS